# GOVERNMENT OF TAMIL NADU
## தமிழ்நாடு அரசு
### RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ DEPARTMENT
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

---

# APPLICATION FOR REGISTRATION OF CONTRACTORS FOR WORKS CONTRACT — 2026
## ஒப்பந்தப் பணிகளுக்கு ஒப்பந்ததாரர் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் — 2026

[Guidelines for Registration of Contractors for Works Contract 2026, issued in G.O.(Ms) No.115, Rural Development and Panchayat Raj (SGS.2) Department, dated 30.06.2026]

[அரசாணை (நிலை) எண். 115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (SGS.2) துறை, நாள் 30.06.2026-இல் வெளியிடப்பட்ட ஒப்பந்தப் பணிகளுக்கான ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் 2026]

| | |
|---|---|
| Application No. (to be assigned by office)<br>விண்ணப்ப எண்<br>(அலுவலகத்தால் வழங்கப்படும்) | |
| Date of Receipt<br>பெறப்பட்ட நாள் | |
| District (DRDA) in which registration is sought<br>பதிவு கோரப்படும் மாவட்டம்<br>(மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) | |
| Class applied for<br>விண்ணப்பிக்கும் வகுப்பு | |
| Name of the Applicant (Legal name in BLOCK letters)<br>விண்ணப்பதாரரின் பெயர்<br>(சட்டப்பூர்வ பெயர் — ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) | |

Affix recent passport-size photograph of the applicant / authorised signatory (35 mm × 45 mm)
விண்ணப்பதாரர் / அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவரின் சமீபத்திய புகைப்படத்தை ஒட்டவும்
Sign partly across the photograph
புகைப்படத்தின் மீது பகுதி கையொப்பம் இடவும்

OFFICE SEAL
அலுவலக முத்திரை
District Rural Development Agency

**READ BEFORE FILLING:** This application shall be filled in BLOCK letters in blue or black ink. Application forms can be downloaded only from **www.tnrd.tn.gov.in**. Registration is made only at the District level (DRDA). Contractors registered in a district are eligible to bid for tenders of all procuring entities within that district and in the geographically contiguous adjoining districts. **Do NOT enclose the Registration Fee or Bank Guarantee with this application** — see instructions at Sections 10 and 12.

**நிரப்புவதற்கு முன் படிக்கவும்:** இந்த விண்ணப்பம் நீல அல்லது கருப்பு மையில், பெரிய எழுத்துக்களில் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை **www.tnrd.tn.gov.in** இணையதளத்திலிருந்து மட்டுமே பதிவிறக்கம் செய்ய முடியும். பதிவு மாவட்ட அளவில் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) மட்டுமே செய்யப்படும். ஒரு மாவட்டத்தில் பதிவு செய்த ஒப்பந்ததாரர்கள், அந்த மாவட்டம் மற்றும் அதன் அண்டை மாவட்டங்களில் உள்ள அனைத்துக் கொள்முதல் அமைப்புகளின் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்கத் தகுதியுடையவர்கள். **பதிவுக் கட்டணம் அல்லது வங்கி உத்தரவாதத்தை இந்த விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டாம்** — பிரிவு 10 மற்றும் 12-இல் உள்ள அறிவுரைகளைக் காண்க.

## FORM A — APPLICATION FOR REGISTRATION படிவம் A — பதிவுக்கான விண்ணப்பம்

Rural Development and Panchayat Raj Department — Contractor Registration 2026

### 1. APPLICATION DETAILS
விண்ணப்ப விவரங்கள்

| Tick<br>குறி | Type of Application<br>விண்ணப்ப வகை | Applicable to / Notes<br>பொருந்தக்கூடிய / குறிப்புகள் |
|---|---|---|
| ☐ | **New Registration**<br>புதிய பதிவு | Applicant registering with RD&PR Department for the first time.<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் முதன்முறையாகப் பதிவு செய்யும் விண்ணப்பதாரர். |
| ☐ | **Renewal of Registration**<br>பதிவைப் புதுப்பித்தல் | Contractors who have not executed any work during the validity period must apply for renewal. No registration fee is payable if applied before lapse of the validity period. (Contractors who executed at least one RD work during validity stand renewed automatically — no application needed.)<br>பதிவு காலத்திற்குள் எந்த ஒரு பணியும் செய்யாத ஒப்பந்ததாரர்கள் புதுப்பிக்க விண்ணப்பிக்க வேண்டும்; செல்லுபடிக் காலம் முடிவதற்கு முன் விண்ணப்பித்தால் பதிவுக் கட்டணம் தேவையில்லை. (குறைந்தபட்சம் ஒரு பணி செய்தவர்களின் பதிவு தானாகவே புதுப்பிக்கப்படும் — விண்ணப்பம் தேவையில்லை.) |
| ☐ | **Promotion to a Higher Class**<br>உயர் வகுப்பிற்கு மேம்படுத்துதல் | Contractor already registered with RD&PR seeking upgradation of class.<br>ஊரக வளர்ச்சித் துறையில் ஏற்கனவே பதிவு செய்த ஒப்பந்ததாரர் உயர் வகுப்பு கோருதல். |
| ☐ | **Registration in Another District**<br>மற்றொரு மாவட்டத்தில் பதிவு | Contractor already registered with RD&PR in one district seeking registration in another district (other than a geographically contiguous adjoining district, where participation is already permitted).<br>ஒரு மாவட்டத்தில் ஏற்கனவே பதிவு செய்தவர், அண்டை மாவட்டம் அல்லாத பிற மாவட்டத்தில் பதிவு கோருதல் (அண்டை மாவட்டங்களில் பங்கேற்பு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளது). |
| ☐ | **Registration by Other-Department Contractor**<br>பிற துறை ஒப்பந்ததாரர் பதிவு | Contractor registered for civil works with any other Government Department / Agency now intending to register with RD&PR.<br>பிற அரசுத் துறை/முகமையில் கட்டுமானப் பணிகளுக்காகப் பதிவு செய்து, தற்போது இத்துறையில் பதிவு செய்ய விரும்புபவர். |
| ☐ | **Re-registration after Expiry**<br>காலாவதிக்குப் பின் மறுபதிவு | Registration not renewed after expiry of validity. If the lapsed period is less than 6 months, 50% of the registration fee is payable; beyond 6 months, full fee.<br>செல்லுபடிக் காலம் முடிந்தும் புதுப்பிக்காதவர். காலாவதியான 6 மாதங்களுக்குள் எனில் பதிவுக் கட்டணத்தில் 50%; அதற்கு மேல் எனில் முழுக் கட்டணம். |
| ☐ | **Re-registration after Blacklist Period**<br>தடைக்காலம் முடிந்த பின் மறுபதிவு | Blacklisted contractor re-registering after expiry of the ban period (12–36 months from date of blacklisting). Registration may be granted in the same or a lower class.<br>கருப்புப் பட்டியல் தடைக்காலம் (12–36 மாதங்கள்) முடிந்த பின் மறுபதிவு; அதே அல்லது கீழ் வகுப்பில் பதிவு வழங்கப்படலாம். |

## 2. CLASS APPLIED FOR (tick one box)
விண்ணப்பிக்கும் வகுப்பு (ஒரு பெட்டியில் மட்டும் குறியிடவும்)

| ☐ CLASS I வகுப்பு I | ☐ CLASS II வகுப்பு II |
|---|---|
| • Single work above **₹50 Lakh** and up to **₹2 Crore**<br>ஒற்றைப் பணி ரூ.50 இலட்சத்திற்கு மேல், ரூ.2 கோடி வரை<br>• Registration Fee: **₹30,000** \| Min. Registration Deposit: **₹4 Lakh** (e-Bank Guarantee)<br>பதிவுக் கட்டணம் ரூ.30,000 \| குறைந்தபட்ச பதிவு வைப்புத் தொகை ரூ.4 இலட்சம் (மின்னணு வங்கி உத்தரவாதம்)<br>• GST transacted ≥ 20% and Turnover ≥ 50% of value sought (any one of preceding 10 Financial Years)<br>GST பரிவர்த்தனை ≥ 20% மற்றும் ஆண்டு வருமானம் ≥ 50% (முந்தைய 10 நிதியாண்டுகளில் ஏதேனும் ஒன்றில்)<br>• Civil work experience ≥ 25% of value sought (any one of preceding 10 Financial Years)<br>கட்டுமானப் பணி அனுபவம் ≥ 25% (முந்தைய 10 நிதியாண்டுகளில் ஏதேனும் ஒன்றில்) | • Single work up to **₹50 Lakh**<br>ஒற்றைப் பணி ரூ.50 இலட்சம் வரை<br>• Registration Fee: **₹20,000** \| Min. Registration Deposit: **₹1 Lakh** (e-Bank Guarantee)<br>பதிவுக் கட்டணம் ரூ.20,000 \| குறைந்தபட்ச பதிவு வைப்புத் தொகை ரூ.1 இலட்சம் (மின்னணு வங்கி உத்தரவாதம்)<br>• GST transacted ≥ 20% and Turnover ≥ 50% of value sought (any one of preceding 10 Financial Years)<br>GST பரிவர்த்தனை ≥ 20% மற்றும் ஆண்டு வருமானம் ≥ 50% (முந்தைய 10 நிதியாண்டுகளில் ஏதேனும் ஒன்றில்)<br>• Civil work experience ≥ 25% of value sought (any one of preceding 10 Financial Years)<br>கட்டுமானப் பணி அனுபவம் ≥ 25% (முந்தைய 10 நிதியாண்டுகளில் ஏதேனும் ஒன்றில்) |
| **☐ NEW ENTRANT புதிய விண்ணப்பதாரர்**<br>• Single work up to **₹10 Lakh**<br>ஒற்றைப் பணி ரூ.10 இலட்சம் வரை<br>• Registration Fee: **₹10,000** \| Min. Registration Deposit: **₹20,000** (e-Bank Guarantee)<br>பதிவுக் கட்டணம் ரூ.10,000 \| குறைந்தபட்ச பதிவு வைப்புத் தொகை ரூ.20,000 (மின்னணு வங்கி உத்தரவாதம்)<br>• No prior civil work experience required; financial documents (GST and Annual Turnover) must be submitted<br>முன் பணி அனுபவம் தேவையில்லை; நிதி ஆவணங்கள் (GST மற்றும் ஆண்டு வருவாய்) சமர்ப்பிக்கப்பட வேண்டும்<br>• May bid for further works only after completing the first work / set of works<br>முதல் பணி / பணிகள் முடிந்த பின்னரே மேலும் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க முடியும் | **CLASS IA — for information only வகுப்பு IA — தகவலுக்கு மட்டும்**<br>• **No registration is required** for tenders valued above ₹2 Crore — open participation subject to prequalification in the tender document<br>ரூ.2 கோடிக்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்குப் **பதிவு தேவையில்லை** — ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் உள்ள முன்தகுதிகளுக்கு உட்பட்டு திறந்த பங்கேற்பு<br>• Successful L1 bidders register post-award (Registration Deposit; Failsafe Deposit for completely new private-sector entrants)<br>குறைந்த புள்ளி கோரிய ஒப்பந்ததாரர், பணி வழங்கப்பட்ட பின் பதிவு செய்வார் (பதிவு வைப்புத் தொகை); முற்றிலும் புதிய தனியார் நிறுவனங்கள் (பதிவு வைப்புத் தொகை மற்றும் பாதுகாப்பு வைப்புத் தொகை செலுத்த வேண்டும்)<br>• Registration Fee: **Nil**; Deposit: **Nil** at application stage. **Do not use this form to apply for Class IA**<br>பதிவுக் கட்டணம்: இல்லை; விண்ணப்ப நிலையில் வைப்புத் தொகை: இல்லை. **வகுப்பு IA-க்கு இந்தப் படிவத்தைப் பயன்படுத்த வேண்டாம்** |

**Minimum business existence:** The applicant should have been in the business of civil construction for a minimum period of **two years** (not applicable to New Entrants and exempted SHG/PLF / unemployed engineer categories). A uniform **50X rule** applies across classes: total value of works held concurrently shall not exceed 50 times the Registration Deposit furnished; top-up of deposit is permitted at any time.

**குறைந்தபட்ச பணிக் காலம்:** விண்ணப்பதாரர் கட்டுமானத் தொழிலில் குறைந்தபட்சம் **இரண்டு ஆண்டுகள்** பணிபுரிந்திருக்க வேண்டும் (புதிய விண்ணப்பதாரர்கள் மற்றும் விலக்கு பெற்ற சுய உதவிக் குழு / கூட்டமைப்பு / வேலையில்லாத பொறியாளர் பிரிவுகளுக்குப் பொருந்தாது). அனைத்து வகுப்புகளுக்கும் **50 மடங்கு விதி** பொருந்தும்: ஒரே நேரத்தில் கைவசம் உள்ள பணிகளின் மொத்த மதிப்பு, செலுத்திய பதிவு வைப்புத் தொகையின் 50 மடங்கை மிகக்கூடாது; கூடுதல் வைப்புத் தொகை எப்போது வேண்டுமானாலும் செலுத்தலாம்.

## 3. APPLICANT DETAILS
விண்ணப்பதாரர் விவரங்கள்

| | |
|---|---|
| 3.1 Legal Name of the Applicant (as in PAN; BLOCK letters)<br>விண்ணப்பதாரரின் சட்டப்பூர்வ பெயர் (PAN-இல் உள்ளபடி) | |
| 3.2 Trade Name / Business Name (as in GST, if different)<br>வணிகப் பெயர் (GST-இல் உள்ளபடி, வேறுபட்டால்) | |
| 3.3 Constitution of the Applicant<br>விண்ணப்பதாரரின் அமைப்பு வகை | ☐ Individual / Proprietorship தனிநபர் / தனியுரிமை ☐ Partnership Firm கூட்டாண்மை நிறுவனம் ☐ LLP<br>☐ Company நிறுவனம் ☐ Registered Society பதிவு செய்யப்பட்ட சங்கம் ☐ SHG / PLF சுய உதவிக் குழு / கூட்டமைப்பு<br>☐ Other statutory body பிற சட்டப்பூர்வ அமைப்பு: ____________________ |
| 3.4 Date of Establishment / Incorporation (minimum 2 years in civil construction business — Clause 6(i))<br>நிறுவப்பட்ட / தொடங்கப்பட்ட நாள் (கட்டுமானத் தொழிலில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் இருந்திருக்க வேண்டும்) | |
| 3.5 Years in Civil Construction Business<br>கட்டுமானத் தொழிலில் அனுபவ ஆண்டுகள் | |
| 3.6 PAN of the Applicant<br>நிரந்தரக் கணக்கு எண் (PAN) | ☐☐☐☐☐☐☐☐☐☐ |
| 3.7 GSTIN<br>சரக்கு மற்றும் சேவைகள் வரி பதிவு எண் | ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐ |
| 3.8 CIN (for Companies)<br>(நிறுவனங்களுக்கு) | |
| 3.9 LLPIN (for LLPs) | |
| 3.10 Society Registration No. & Year (for Registered Societies)<br>சங்கப் பதிவு எண் மற்றும் ஆண்டு | |
| 3.11 Partnership Deed Date / Firm Registration No. (for Partnership Firms)<br>கூட்டாண்மை ஒப்பாவண நாள் / நிறுவனப் பதிவு எண் | |
| 3.12 Name of person holding Power of Attorney (authorised signatory, in case of firm / LLP / company / society; enclose PoA / Board Resolution)<br>முழு அதிகாரம் (Power of Attorney) பெற்றவரின் பெயர் (நிறுவனம்/சங்கம் எனில்; அதிகார ஆவணம் / இயக்குநர் குழுத் தீர்மானம் இணைக்கவும்) | |

Details of all Partners / Directors / Office Bearers shall be furnished in **Annexure II**.
அனைத்துக் கூட்டாளிகள் / இயக்குநர்கள் / நிர்வாகிகளின் விவரங்கள் **இணைப்பு II**-இல் அளிக்கப்பட வேண்டும்.

## 4. ADDRESS
முகவரி

### 4.1 REGISTERED OFFICE ADDRESS (enclose proof of address) பதிவு அலுவலக முகவரி (முகவரிச் சான்று இணைக்கவும்)

| | |
|---|---|
| Address<br>முகவரி | |
| District / State / PIN<br>மாவட்டம் / மாநிலம் / அஞ்சல் குறியீடு | District: ______________________ State: _______________ PIN: [ ][ ][ ][ ][ ][ ] |

### 4.2 ADDRESS FOR COMMUNICATION (if different from 4.1) கடிதப் போக்குவரத்து முகவரி (4.1-இலிருந்து வேறுபட்டால்)

| | |
|---|---|
| Address<br>முகவரி | |
| District / State / PIN<br>மாவட்டம் / மாநிலம் / அஞ்சல் குறியீடு | District: ______________________ State: _______________ PIN: [ ][ ][ ][ ][ ][ ] |
| Google Maps location reference (optional — plus code or link)<br>கூகுள் வரைபட இருப்பிடக் குறியீடு (விருப்பத் தேர்வு) | |

## 5. CONTACT DETAILS
தொடர்பு விவரங்கள்

| | |
|---|---|
| 5.1 Primary Mobile Number (SMS/OTP will be sent to this number)<br>முதன்மை அலைபேசி எண் (SMS/OTP இந்த எண்ணிற்கு அனுப்பப்படும்) | [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ] |
| 5.2 Alternate Mobile Number<br>மாற்று அலைபேசி எண் | [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ] |
| 5.3 E-mail ID (official communications incl. show-cause notices may be sent to this e-mail — keep it active)<br>மின்னஞ்சல் முகவரி (விளக்கம் கோரும் தாக்கீது உள்ளிட்ட அலுவல்பூர்வ தொடர்புகள் இதற்கு அனுப்பப்படலாம் — செயல்பாட்டில் வைத்திருக்கவும்) | |
| 5.4 Website (if any)<br>இணையதளம் (இருப்பின்) | |

## 6. BANK ACCOUNT DETAILS (account of the applicant for payment purposes — NOT for Bank Guarantee)
வங்கிக் கணக்கு விவரங்கள் (பணம் பெறுவதற்கான கணக்கு — வங்கி உத்தரவாதத்திற்கு அல்ல)

| | |
|---|---|
| 6.1 Name of the Bank<br>வங்கியின் பெயர் | |
| 6.2 Branch<br>வங்கி கிளை | |
| 6.3 Account Name (must match legal / trade name)<br>கணக்குப் பெயர் (சட்டப்பூர்வ / வணிகப் பெயருடன் பொருந்த வேண்டும்) | |
| 6.4 Account Number<br>கணக்கு எண் | |
| 6.5 IFSC Code | [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ] |

Enclose a self-attested copy of the first page of the bank passbook / a cancelled cheque leaf.
சுய சான்றொப்பமிட்ட வங்கி கணக்கேட்டின் முதல் பக்கம் / ரத்து செய்யப்பட்ட காசோலையின் நகலை இணைக்கவும்.

## 7. EXISTING REGISTRATION
தற்போதைய பதிவுகள்

| | |
|---|---|
| 7.1 Is the applicant already registered as a contractor with the RD&PR Department (at district or block level) or with any other Government Department / Agency?<br>விண்ணப்பதாரர் ஏற்கனவே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் (மாவட்ட/வட்டார அளவில்) அல்லது பிற அரசுத் துறை/முகமையில் ஒப்பந்ததாரராகப் பதிவு செய்துள்ளாரா? | ☐ Yes ஆம் ☐ No இல்லை |
| 7.2 If Yes, number of registrations held<br>ஆம் எனில், பதிவுகளின் எண்ணிக்கை | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை: __________<br>Other Departments பிற துறைகள்: __________ |

If Yes, furnish complete particulars of every registration in **Annexure IV**. Contractors already registered within a district (even at block level) are automatically included in the district list and assigned to the new class corresponding to the higher limit of their earlier class; their existing Bank Guarantee shall be released upon submission of the new Registration Deposit.

ஆம் எனில், ஒவ்வொரு பதிவின் முழு விவரங்களையும் **இணைப்பு IV**-இல் அளிக்கவும். ஒரு மாவட்டத்தில் (வட்டார அளவில் கூட) ஏற்கனவே பதிவு செய்தவர்கள், அம்மாவட்டப் பட்டியலில் தானாகவே சேர்க்கப்பட்டு, ஏற்கனவே உள்ள வகுப்பின் உச்ச வரம்பிற்கு இணையான புதிய வகுப்பு ஒதுக்கப்படும்; புதிய பதிவு வைப்புத் தொகை சமர்ப்பித்தவுடன் பழைய வங்கி உத்தரவாதம் விடுவிக்கப்படும்.

## 8. CLAIM FOR EXEMPTION FROM REGISTRATION FEE (tick if applicable)
பதிவுக் கட்டண விலக்குக் கோருதல் (பொருந்தினால் குறியிடவும்)

| **Tick**<br>குறி | **Category**<br>பிரிவு | **Supporting document to be enclosed**<br>இணைக்க வேண்டிய ஆதார ஆவணம் |
|---|---|---|
| ☐ | Scheduled Caste (Individual / Partnership firm / Private limited company — partners / board of directors shall be from SC/ST)<br>ஆதிதிராவிடர் (தனிநபர் / கூட்டாண்மை நிறுவனம் / தனியுரிமை வரம்பிற்குட்பட்ட நிறுவனம் — பங்குதாரர்கள் / இயக்குநர்கள் அனைவரும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினராக இருத்தல் வேண்டும்) | Community certificate(s) of the individual / all partners / all directors<br>தனிநபர் / அனைத்துக் கூட்டாளிகள் / இயக்குநர்களின் சாதிச் சான்றிதழ்(கள்) |
| ☐ | Scheduled Tribe (as above)<br>பழங்குடியினர் (மேற்கண்டவாறு) | Community certificate(s)<br>சாதிச் சான்றிதழ்(கள்) |
| ☐ | SC/ST — Inter-caste married couple<br>ஆதிதிராவிடர்/பழங்குடியினர் — கலப்புத் திருமணம் செய்த தம்பதியர் | Inter-caste marriage certificate / community certificates of the spouses<br>கலப்புத் திருமணச் சான்றிதழ் / தம்பதியரின் சாதிச் சான்றிதழ்கள் |
| ☐ | Woman Contractor<br>பெண் ஒப்பந்ததாரர் | Identity proof of the woman applicant / woman proprietor<br>பெண் விண்ணப்பதாரர் / உரிமையாளரின் அடையாளச் சான்று |
| ☐ | Self-Help Group (SHG) — approved by TNCDW<br>சுய உதவிக் குழு — தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டது | TNCDW approval / recognition document<br>அங்கீகார ஆவணம் |
| ☐ | Panchayat Level Federation (PLF) — approved by TNCDW<br>ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு — தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டது | TNCDW approval / recognition document<br>அங்கீகார ஆவணம் |
| ☐ | Unemployed Civil Engineering Graduate / Diploma holder (completed within the last 5 years)<br>வேலையில்லாத கட்டுமான பொறியியல் பட்டதாரி / பட்டயப் படிப்பு முடித்தவர் (கடந்த 5 ஆண்டுகளுக்குள் படிப்பை முடித்திருக்க வேண்டும்) | Degree / Diploma certificate + certificate from the District Employment Officer (to be produced every 6 months to keep the registration live)<br>பட்டம் / பட்டயச் சான்றிதழ் + மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சான்றிதழ் (பதிவைச் செயலில் வைத்திருக்க 6 மாதங்களுக்கு ஒருமுறை சமர்ப்பிக்க வேண்டும்) |

**IMPORTANT:** Documentary proof is mandatory for every exemption claimed. For SHG / PLF and Unemployed Civil Engineering Graduates / Diploma holders: exemption extends to both the registration fee **and** production of IT/GST certificates; however, such registrants are eligible only for works up to **₹5 Lakh** each, with cumulative works awarded not exceeding **₹10 Lakh** at any point of time. The concession to unemployed engineers is one-time and valid for 3 years.

**முக்கியம்:** கோரப்படும் ஒவ்வொரு விலக்கிற்கும் ஆவணச் சான்று கட்டாயம். சுய உதவிக் குழு / கூட்டமைப்பு மற்றும் வேலையில்லாத பொறியியல் பட்டதாரி / பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கு: பதிவுக் கட்டணம் **மற்றும்** வருமான வரி / GST சான்றிதழ் சமர்ப்பித்தல் — இரண்டிலிருந்தும் விலக்கு; ஆனால் இவர்கள் **ரூ.5 இலட்சம்** வரை உள்ள பணிகளுக்கு மட்டுமே தகுதியுடையவர்கள்; வழங்கப்படும் பணிகளின் ஒட்டுமொத்த மதிப்பு எக்காலத்திலும் **ரூ.10 இலட்சத்தை** மிகக்கூடாது. வேலையில்லாத பொறியாளர்களுக்கான சலுகை ஒருமுறை மட்டும், 3 ஆண்டுகளுக்கு.

## 9. BUSINESS EXPERIENCE — SUMMARY
தொழில் அனுபவம் — சுருக்கம்

| | |
|---|---|
| 9.1 Total years of experience in civil construction (Government + private)<br>கட்டுமானத் துறையில் மொத்த அனுபவ ஆண்டுகள் (அரசு + தனியார்) | |
| 9.2 Types of works executed (roads, buildings, water supply, sanitation, etc.)<br>செய்த பணி வகைகள் (சாலைகள், கட்டிடங்கள், குடிநீர், துப்புரவு போன்றவை) | |
| 9.3 Number of works executed in the preceding 10 financial years<br>முந்தைய 10 நிதியாண்டுகளில் செய்த பணிகளின் எண்ணிக்கை | Government அரசு: __________ Private sector தனியார்: __________ |
| 9.4 Largest single work executed (name of work, value and year)<br>செய்த மிகப்பெரிய ஒற்றைப் பணி (பணியின் பெயர், மதிப்பு, ஆண்டு) | |
| 9.5 Brief description of overall experience<br>ஒட்டுமொத்த அனுபவம் — சுருக்கமான விவரம் | |

**IMPORTANT:** This section is a summary only. Full particulars of works executed must be furnished in **Annexure I** with supporting completion / experience certificates. Experience in civil construction in the **private sector shall also be counted**. Additional sheets in the format of Annexure I may be attached if 20 rows are insufficient. Not applicable to New Entrants.

**முக்கியம்:** இந்தப் பிரிவு சுருக்கம் மட்டுமே. செய்த பணிகளின் முழு விவரங்களை, பணி நிறைவு / அனுபவச் சான்றிதழ்களுடன் **இணைப்பு I**-இல் அளிக்க வேண்டும். **தனியார் துறையில் பெற்ற கட்டுமான அனுபவமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்**. 20 வரிசைகள் போதவில்லை எனில், இணைப்பு I வடிவிலான கூடுதல் தாள்களை இணைக்கலாம். புதிய விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.

## 10. FINANCIAL & TECHNICAL ELIGIBILITY — DECLARATION OF VALUES
நிதி மற்றும் தொழில்நுட்பத் தகுதி — மதிப்பு அறிவிப்பு

| | |
|---|---|
| 10.1 Registration Value Sought (₹) (the maximum single-work value for which registration is sought — the upper limit of the class applied for, or a lower value)<br>பதிவு கோரப்படும் மதிப்பு (ரூ.) (பதிவு கோரும் அதிகபட்ச ஒற்றைப் பணியின் மதிப்பு — வகுப்பின் உச்ச வரம்பு அல்லது அதற்குக் குறைவான மதிப்பு) | |
| 10.2 GST transacted in the best financial year (₹ and FY) (must be ≥ 20% of 10.1, in any one of the preceding 10 FYs; for FY 2016–17 and 2017–18, equivalent VAT / Sales Tax transacted may be reckoned — see Annexure III)<br>சிறந்த நிதியாண்டில் GST பரிவர்த்தனை (10.1-இல் 20%-க்குக் குறையாமல், முந்தைய 10 நிதியாண்டுகளில் ஏதேனும் ஒன்றில்; 2016–17, 2017–18 ஆண்டுகளுக்கு VAT / விற்பனை வரி இணையாகக் கணக்கிடப்படும் — இணைப்பு III காண்க) | ₹ ____________________ Lakh FY: 20____ – 20____ |
| 10.3 Audited Annual Turnover in the best financial year (₹ and FY) (must be ≥ 50% of 10.1, in any one of the preceding 10 FYs, supported by Auditor's certificate)<br>சிறந்த நிதியாண்டில் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு வருமானம் (10.1-இல் 50%-க்குக் குறையாமல்; தணிக்கையாளர் சான்றிதழுடன்) | ₹ ____________________ Lakh FY: 20____ – 20____ |
| 10.4 Value of civil works executed in the best financial year, with adjustment @5% per annum (₹ and FY) (adjusted value must be ≥ 25% of 10.1 — see Annexure I)<br>சிறந்த நிதியாண்டில் செய்த கட்டுமானப் பணிகளின் மதிப்பு, ஆண்டுக்கு 5% கூட்டுடன் (சரிசெய்யப்பட்ட மதிப்பு 10.1-இல் 25%-க்குக் குறையக்கூடாது — இணைப்பு I காண்க) | Actual உண்மை: ₹ ____________ Lakh Adjusted சரிசெய்யப்பட்டது: ₹ ____________ Lakh FY: 20____ – 20____ |
| 10.5 Are GST and IT returns filed up to date in the name under which registration is sought?<br>பதிவு கோரப்படும் பெயரில் GST மற்றும் வருமான வரி கணக்குகள் தற்போது வரை தாக்கல் செய்யப்பட்டுள்ளனவா? | ☐ Yes ஆம் ☐ No இல்லை |

**Both** the financial capacity (10.2 and 10.3) and civil work experience (10.4) criteria are **independent and mandatory** (except for New Entrants). Financial particulars for all ten financial years shall be furnished in **Annexure III** with certification by a Chartered Accountant.
நிதித் திறன் (10.2, 10.3) மற்றும் கட்டுமானப் பணி அனுபவம் (10.4) ஆகிய **இரு தகுதி வரம்புகளும் தனித்தனியானவை மற்றும் கட்டாயமானவை** (புதிய விண்ணப்பதாரர்கள் தவிர). பத்து நிதியாண்டுகளுக்கான நிதி விவரங்களை, பட்டயக் கணக்காளர் (CA) சான்றுடன் **இணைப்பு III**-இல் அளிக்க வேண்டும்.

**IMPORTANT — REGISTRATION FEE:** The Registration Fee should **NOT** be enclosed or remitted along with this application. The fee shall be remitted **only through online mode** to the designated bank account, and **only after** communication by the Registering Authority regarding the class approved. The registration fee, once paid, is not refundable.
**முக்கியம் — பதிவுக் கட்டணம்:** பதிவுக் கட்டணத்தை இந்த விண்ணப்பத்துடன் இணைக்கவோ செலுத்தவோ **கூடாது**. பதிவு செய்யும் அலுவலர், ஒப்புதல் அளிக்கப்பட்ட வகுப்பு குறித்துத் தெரிவித்த **பின்னரே**, நியமிக்கப்பட்ட வங்கிக் கணக்கிற்கு **இணையவழியில் மட்டுமே** கட்டணம் செலுத்த வேண்டும். செலுத்தப்பட்ட பதிவுக் கட்டணம் திரும்ப வழங்கப்படாது.

**IMPORTANT — REGISTRATION DEPOSIT (BANK GUARANTEE):** The Registration Deposit shall **NOT** accompany this application. After approval and payment of the Registration Fee, the applicant shall furnish an irrevocable **Electronic Bank Guarantee** (valid for three years) for not less than the minimum deposit of the approved class, within **15 days** of the fee-payment communication. A contractor may furnish a higher deposit (top-up) at any time to increase the 50X concurrent work limit.
**முக்கியம் — பதிவு வைப்புத் தொகை (வங்கி உத்தரவாதம்):** பதிவு வைப்புத் தொகையை இந்த விண்ணப்பத்துடன் இணைக்கக் **கூடாது**. ஒப்புதல் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்திய பின், கட்டணச் செலுத்தல் தகவல் பெறப்பட்ட **15 நாட்களுக்குள்**, ஒப்புதல் பெற்ற வகுப்பின் குறைந்தபட்ச வைப்புத் தொகைக்குக் குறையாத, மூன்று ஆண்டுகள் செல்லுபடியாகும், திரும்பப் பெற முடியாத **மின்னணு வங்கி உத்தரவாதத்தை** விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும். 50 மடங்கு பணி வரம்பை உயர்த்த, கூடுதல் வைப்புத் தொகையை எப்போது வேண்டுமானாலும் செலுத்தலாம்.

## 11. PROPERTY DETAILS (property owned by the applicant, in respect of which the 'Nil' Encumbrance Certificate is enclosed)
## சொத்து விவரங்கள் (வில்லங்கம் ஏதுமில்லை எனும் வில்லங்கச் சான்றிதழ் இணைக்கப்படும் — விண்ணப்பதாரருக்குச் சொந்தமான சொத்து)

| | |
|---|---|
| 11.1 Name of the property owner (applicant / partner / director, as applicable)<br>சொத்து உரிமையாளரின் பெயர் (விண்ணப்பதாரர் / கூட்டாளி / இயக்குநர் — பொருந்தியவாறு) | |
| 11.2 Survey No. / Sub-division No.<br>புல எண் / உட்பிரிவு எண் | |
| 11.3 Village / Town, Taluk and District<br>கிராமம் / நகரம், வட்டம் மற்றும் மாவட்டம் | |
| 11.4 Extent of the property<br>சொத்தின் பரப்பளவு | |
| 11.5 Sub-Registrar Office (SRO)<br>சார்பதிவாளர் அலுவலகம் | |
| 11.6 Encumbrance Certificate No. and Date<br>வில்லங்கச் சான்றிதழ் எண் மற்றும் நாள் | |

**IMPORTANT:** The 'Nil' Encumbrance Certificate must have been issued within **30 days** from the date of this application, and a self-attested photocopy must be enclosed.
**முக்கியம்:** வில்லங்கம் ஏதுமில்லை எனும் வில்லங்கச் சான்றிதழ், விண்ணப்பிக்கும் நாளிலிருந்து **30 நாட்களுக்குள்** பெறப்பட்டதாக இருக்க வேண்டும்; அதன் சுய சான்றொப்பமிட்ட ஒளிநகல் இணைக்கப்பட வேண்டும்.

## 12. DECLARATION AND UNDERTAKING
உறுதிமொழியும் ஒப்புதலும்

I / We, the applicant named in Section 3 of this application, do hereby solemnly declare and undertake as follows:
இவ்விண்ணப்பத்தின் பிரிவு 3-இல் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரராகிய நான் / நாங்கள், பின்வருமாறு உறுதியாக அறிவித்து ஒப்புக்கொள்கிறேன் / கிறோம்:

1. The information furnished in this application and its Annexures is true, complete and correct to the best of my/our knowledge and belief, and no material information has been suppressed.
   இவ்விண்ணப்பத்திலும் இணைப்புகளிலும் அளிக்கப்பட்ட தகவல்கள் எனது/எங்கள் அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை, முழுமையானவை, சரியானவை; எந்த முக்கியத் தகவலும் மறைக்கப்படவில்லை.
2. I/We have read and understood the Guidelines for Registration of Contractors for Works Contract 2026 issued in G.O.(Ms) No. 115, RD&PR (SGS.2) Department, dated 30.06.2026, and agree to abide by them and by all applicable rules including the Tamil Nadu Transparency in Tenders Act and Rules.
   அரசாணை (நிலை) எண்.115, நாள் 30.06.2026-இல் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் 2026-ஐ படித்துப் புரிந்துகொண்டேன்/கொண்டோம்; அவற்றையும், தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் வெளிப்படைத்தன்மைச் சட்டம் மற்றும் விதிகள் உள்ளிட்ட அனைத்து விதிகளையும் கடைப்பிடிக்க ஒப்புக்கொள்கிறேன்/கிறோம்.
3. I/We am/are not currently blacklisted or banned by any Government Department / Agency within or outside the State (a notarized affidavit in the format at Annexure VI is enclosed).
   மாநிலத்திற்குள்ளோ வெளியிலோ எந்த அரசுத் துறை/முகமையாலும் தற்போது கருப்புப் பட்டியலில் வைக்கப்படவோ தடை செய்யப்படவோ இல்லை (இணைப்பு VI வடிவிலான நோட்டரி உறுதிமொழிப் பத்திரம் இணைக்கப்பட்டுள்ளது).
4. Neither the applicant nor any partner / director / office bearer has been convicted by a Court of Law for offences involving moral turpitude in relation to business dealings.
   விண்ணப்பதாரரோ, எந்தக் கூட்டாளியோ / இயக்குநரோ / நிர்வாகியோ வணிக நடவடிக்கைகள் தொடர்பான ஒழுக்கக்கேடான குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவில்லை.
5. Litigation / Arbitration disclosure: The applicant or any partner/director is ☐ currently involved ☐ not currently involved in arbitration / litigation relating to any contract works. (If involved, full details are enclosed as a separate sheet.)
   வழக்கு / நடுவர் தீர்ப்பு விவரம்: ஒப்பந்தப் பணிகள் தொடர்பான நடுவர் / நீதிமன்ற வழக்குகளில் தற்போது ஈடுபட்டுள்ளேன் / ஈடுபடவில்லை (மேலே குறியிடவும்; ஈடுபட்டிருந்தால் முழு விவரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது).
6. Removal / ban history: The applicant or any partner/director ☐ has ☐ has not at any time been removed from any list of contractors or banned from business dealings with any Government. (If yes, full details are enclosed as a separate sheet.)
